மேனிலை இரண்டாம் ஆண்டு

மனையியல்

மாதிரி வினாத்தாள் – II

நேரம் : 2.30 மணி பகுதி – I மதிப்பெண்: 70

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15 x 1 = 15**

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1 ____________ தரம் தோல் மட்டும் சிவந்திருக்கும்

அ. முதல் ஆ. இரண்டாம்

இ. மூன்றாம் ஈ. நான்காம்

2 வழக்கமாக பருத்தி துணிகள் ____________ அகலம் உள்ளது

அ. 95 செ.மீ ஆ. 92 செ.மீ

இ. 93 செ.மீ ஈ. 94 செ.மீ

3 வெளிப்புற நார் அடுக்கு________

அ. ஸ்கிளிரா ஆ. கோரய்டு

இ. ரெட்டினா ஈ. கார்னியா

4 ஒவ்வொரு அண்டகத்திலும் சுமார்____________அண்டங்கள் அல்லது முட்டைகள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

.அ.. 40000 ஆ. 30000 இ. 20000 ஈ. 10000

5 ____________ சத்து குறைவால் பைடாட்ஸ் புள்ளிகள் ஏற்படுகிறது.

அ. உயிர்ச்சத்து K ஆ. உயிர்ச்சத்து A

இ. உயிர்ச்சத்து B ஈ. உயிர்ச்சத்து D

6 பாட்டுலிசம் நோய் பரப்பும் நுண்ணுயிரி___________

அ. சால்மோனெல்ல டைஃபோசா

ஆ. க்ளாஸ்டிரீடியம்

இ. க்ளாஸ்டிரீடியம் பாட்டுலிசம்

ஈ. ஸ்டாபிலோக்கல்

7 உணவுக் கலப்படத்தை தடுக்கும் சட்டம்____________

அ. 1952 ஆ. 1953 இ. 1954 ஈ. 1956

8 முன் முதிர்வயது வருவம் என்பது ____________

அ. 10 முதல் 17 வயது

ஆ. 18 முதல் 40 வயது

இ. 40 முதல் 60 வயது

ஈ. 60 வயது 80 வயது

9 ____________பிறக்கும் போதே குழந்தை பார்வை இழந்து பிறப்பதைக் குறிக்கிறது

அ. பிறவியோடு ஏற்பட்ட பார்வை இழப்பு

ஆ. இடையே பெறப்பட்ட பார்வை இழப்பு

இ. ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்பட்ட பார்வை இழப்பு

ஈ. தாமதமாக தரப்படும் சிகிச்சை

10 நிர்வாக செயல்பாட்டின் வெற்றிக்கு________ மிக முக்கியமானதாகும்.

அ. திட்டமிடுதல் ஆ. கட்டுப்படுத்தல்

இ. ஒழுங்குப்படுத்தல் ஈ. மதிப்பிடுதல்

11 மனித வளம்____________

அ. பணம் ஆ திறமை

இ. மரச்சாமான்கள் ஈ. எரிபொருள்

12 ____________திடமான நிரப்பு தையல்

அ. சாட்டின் ஆ. எல்லைக்கோடு

இ. முடிச்சு ஈ. சங்கிலி

13 _____________ தயாரிப்பாளர்களின் தயாரிப்புக்கு பொருளை அடையாளம் கண்டறிவதற்கானது ஆகும்

அ. தர அடையாளம் ஆ. விலை

இ. பொருத்தம் ஈ. பொருத்தமானதாக்குதல்

14 ஃப்ளாஷ் அட்டைகளை தயாரிக்கும்போது மொத்தம்____________அட்டைகள் மட்டுமே இருத்தல் வேண்டும்

அ. 5 முதல் 10 ஆ. 10 முதல் 12

இ. 12 முதல் 15 ஈ. 15 முதல் 17

15 ____________ கற்பித்தலுக்கு உலகமெங்கும் எழுதுவதற்கும், வரைவதற்கும் பயன்படுகிறது.

அ. சுண்ணாம்பு பலகை

ஆ. கால அறிவிப்பு வெளியீட்டு பலகை

இ. ஃப்ளானல் பலகைகள்

ஈ. ஃப்ளாஷ் அட்டைகள்

## பகுதி – ஆ

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்** **6x 2 = 12**

**வினா எண் 16-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்**

16 தோல் அடுக்குகளின் வகைகள் யாவை?

17 தீப்புண்களின் தரங்களை எழுதுக.

18 ஜுரத்தின் வகைகள் யாவை?

19 “நடுவயதுப் பருவம் என்பது அழுத்தம் நிறைந்த காலம்” விளக்குக.

20 வளரிளம் பருவத்தின் மகிழ்ச்சிக்கான 3A-க்களை விவரி.

21 நல்ல எரிபொருளின் தன்மைகளைப் பட்டியலிடுக.

22 சீட்டு என்றால் என்ன?

23 விரிவுரையாற்றும் முறைகளை எழுதுக.

24 குறிக்கோள்கள் என்றால் என்ன?

## பகுதி – இ 6 X 3 = 18

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினா எண் 25-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

25 தீர்மானித்தலின் படிகளை எழுதுக.

26 பொத்தான் கயிற்று மடிப்பு வளையம் பற்றி குறிப்பு எழுதுக.

27 மாதிரிகள் என்றால் என்ன? அதன் வகைகளைப் பட்டியலிடுக.

28 விவாகரத்து ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

29 உணவு பதப்படுத்துவதன் கொள்கைகள் யாவை?

30 அட்ரினல் கார்டெக்ஸ் – சுரக்கும் ஹார்மோன்கள் யாவை?

31 உணவு சேர்க்கைகள் என்றால் என்ன?

32 பெல்லாக்ரா நோயினை 3D நோய் என்றும் கூறுவர் விவாதி.

33 விந்தகத்தின் பணிகள் யாவை?

பகுதி – ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **5 X 5 = 25**

34 ஆடையில் தீப்பிடித்த மனிதரை எப்படி கையாள்வது, என்ன முதலுதவி செய்வாய்?

(அல்லது)

முதலுதவியாளரின் பொறுப்புகள் யாவை? முதலுதவிப் பெட்டியில் இருக்க வேண்டியவை எவை?

35 நெப்ரானின் அமைப்பை படம் வரைந்து சிறுநீரகத்தின் வேலைகளை எழுதுக.

(அல்லது)

கேட்டலில் உள்ள உடற்செயலியலை விவரி.

36 சாதாரணமாக கலப்படம் செய்யப்படுகின்ற 5 உணவுகளைப் பட்டியலிடுக மற்றும் அவற்றில் கலப்படம் செய்யப்படுவதைக் கண்டறியும் எளிய சோதனை முறைகளை எழுதுக.

(அல்லது)

பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதப்படுத்தும் ஏதேனும் 3 முறைகளை விவரி.

37 குழந்தைகளிடம் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளுக்கான காரணங்கள்

யாவை?

(அல்லது)

வளரிளம் பருவத்தில் ஏற்படும் உட்புற மற்றும் வெளிப்புற மாற்றங்கள் யாவை

38 நடுத்தர வருமானம் கொண்ட கணவன், மனைவி இரண்டு பள்ளி செல்லும் குழந்தைகள் உள்ள குடும்பத்தின் வரவு, செலவு திட்டத்தை அமைத்து விளக்குக.

(அல்லது)

மீராவுக்கு தன் சேலையில் சித்திரப்பின்னல் வேலைப்பாடு செய்ய விருப்பம் ஏதேனும் மூன்று தையலுக்கு விளக்கம் எழுதுக.